DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -23

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. ராதிகா | Caste: |
| Husband's Name: | திரு. அன்பழகன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 11.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் காளியம்மன்கோவில் தெருவில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். அவர்கள் எங்களது ஊரை சேர்ந்தவர்கள். அவர்கள் உறவினர்கள் இல்லை. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது ஊரை சேர்ந்தவர்கள் தான். எதிரி திருஞானம் வழக்கு சம்பவகாலத்தில் எனது வீட்டின் அருகே வசித்து வந்தார். கடந்த 2008 ஆம் ஆண்டு ஒரு நாள் நான் வேலைக்கு போய்விட்டேன்.

அன்றைய தினம் ஊரில் சங்கர் தரப்பினருக்கும், தேசிங்குபாலன் தரப்பினருக்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள். அந்த சண்டையில் சங்கர், பிரபு, காசிநாதன் உள்ளிட்ட 5 பேர் இறந்துவிட்டார்கள். சங்கர் என்பவர் காசிநாதனின் மூத்த மகன்.

அவருக்கு வேறு பெயர் இருக்கிறது எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட சண்டை தொடர்பாக கேள்விபட்டு பயந்துகொண்டு காட்டிலேயே இருந்துவிட்டோம். மாலையில்தான் வீட்டிற்கு திரும்பினோம். நான் எதுவும் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் வேறுஎதுவும் கேள்விபடவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் நான் கடந்த 16.05.2008 அன்று காலை சுமார் 10 மணியளவில் நான் காளியம்மன் கோவில் எதிரில் கூலிவேலைக்கு போவது சம்மந்தமாக என் தாத்தா சாமிதுரையிடம் பேசிகொண்டு நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது நாங்கள் நிற்கும் இடத்திற்கு கிழக்கேயிருந்து வெட்டுங்கடா வெட்டுங்கடா என்று சத்தம் கேட்டதாகவும், சிறிது நேரத்தில் ஜானகியின் அழு குரல் கேட்டதாகவும், திரும்பி பார்த்தபோது எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் ரத்தம்சொட்ட சொட்ட கத்தியுடன் ஒருமனித தலையை துாக்கிகொண்டு ஓடிவந்து அத்தலையை காளியம்மன் கோவில் எதிரிலுள்ள சூலத்தில் குத்தியதாகவும், சிறிது நேரத்தில் ராமசாமி மகன் பழனிசாமி ஒருமனித தலையை துாக்கிகொண்டு ஓடிவந்து அதனை காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் வைத்ததாகவும், அவர்களுக்கு பின்னால் எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பிரபாகரன், தினேஷ், ராஜதுரை, திருவாளப்புத்துார் ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கரன் ஆகியோர் ஆளுக்கொரு கத்தியுடன் வந்ததாகவும், சிறிது நேரத்தில் அவர்கள் எல்லோரும் கோவிலுக்கு மேற்குபக்கமாக போய்விட்டாகவும் சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மேலும் நான் போலிசார் விசாரணையில் என் தாத்தாவுடன் நான் கோவிலுக்கு சென்று பார்த்தபோது சூலத்தில் குத்தப்பட்டது தர்மலிங்கத்தின் தலை என்றும், கோவிலுக்கு பின்புறம் இருந்தது பிரபுவின் தலை என்றும் தெரிந்துகொண்டதாகவும், நான் பின்னர் கிழக்காக சென்று பார்த்தபோது காசிநாதன் மனைவி வெட்டுகாயத்துடன்

மயங்கி கிடந்ததாகவும், காசிநாதன் வீட்டிற்கு கீழ்புறம் காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோர் வெட்டப்பட்டு ரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்ததாகவும், தர்மலிங்கத்தின் உடல் தலையில்லாமல் இருந்தது என்றும், பாலுசாமி வீட்டிற்கு பக்கத்தில் பாரிவள்ளல் மகன் பிரபு வெட்டப்பட்டு தலையில்லாமல் முண்டத்துடன் கிடந்தார் என்றும், அந்த இடத்திற்கு சற்று தொலைவில் சுரேஷ் வெட்டப்பட்டு இறந்துகிடந்தார் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் நடந்தது உண்மையென்றும், ஆனால் தான் எதனையும் நேரில்பார்க்கவில்லை என்றும் சொல்லுகிறார். நான் போலிசார் விசாரணையில் சொன்ன சங்கதிகள் உண்மை என்றாலும், அந்த சங்கதிகளை நான் நேரில் பார்த்தேன் என்றாலும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு தற்போது நினைவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.